**PRIMARY 4 - 1000 VOCAB WORDS TO EXCEL IN EXAMS**

**தொடக்க நிலை 4 - சிறப்புத் தேர்ச்சிக்கான 1000 சொல்வளங்கள்**


| எண் | பகுதி 1 - 25 நீதிக்கதைகளும் பயிற்சிகளும்<br>கருப்பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | புத்திக்கூர்மை அவசியம் | 1 - 6 |
| 2 | கோபத்தைக் குறைத்துக்கொள் | 7 - 12 |
| 3 | சிறுமை சீரழிக்கும் | 13 - 18 |
| 4 | அறிவாற்றல் கூர்மையானது | 19 - 24 |
| 5 | நீ நீயாக இரு | 25 - 30 |
| 6 | எண்ணம் அறிந்து உதவு | 31 - 36 |
| 7 | பொறுமையால் அதிர்ஷ்டம் | 37 - 42 |
| 8 | பேராசை பெரு நஷ்டம் | 43 - 48 |
| 9 | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு | 49 - 54 |
| 10 | குறை பேசாதே | 55 - 60 |
| 11 | நட்புக்குத் துரோகம் | 61 - 66 |
| 12 | அன்பான நண்பனை ஆபத்தில் அறி | 67 - 72 |
| 13 | சிந்தித்துச் செயல்படு | 73 - 78 |
| 14 | பொய் பாதகம் தரும் | 79 - 84 |
| 15 | ஏமாற்றாதே | 85 - 90 |
| 16 | நம்பியவருக்குத் துரோகம் | 91 - 96 |
| 17 | தைரியம் வாழ்வு தரும் | 97 - 102 |
| 18 | புத்தியோடு பிழைத்துக்கொள் | 103 - 108 |
| 19 | பொய் சொல்லாதே | 109 - 114 |
| 20 | வஞ்சகம் பேசேல் | 115 - 120 |
| 21 | சாதுரியம் | 121 - 126 |
| 22 | சுயபுத்தி | 127 - 132 |
| 23 | சிந்தித்து நட்புக்கொள் | 133 - 138 |
| 24 | நேர்மை | 139 - 144 |
| 25 | நன்றி மறவாதே | 145 - 150 |
| விடைத்தாள் | | 151 - 163 |

| எண் | பகுதி 2 - 625 சொற்கள் கொண்ட பட அகராதி | பக்கம் |
|---|---|---|
| | தலைப்பு | |
| 1 | பழங்கள் (Fruits) | 164 - 166 |
| 2 | மரங்களும் செடிகளும் (Trees And Plants) | 167 - 169 |
| 3 | பூச்சிகள் (Insects) | 170 - 172 |
| 4 | வாகனங்கள் (Vehicles) | 173 - 175 |
| 5 | அலுவலகம் (Office) | 176 - 178 |
| 6 | மீன் வகைகள் (Fish Types) | 179 -181 |
| 7 | உடல் உறுப்புகள் (Body Parts) | 182 - 184 |
| 8 | குடும்ப உறவுகள் (Relationships) | 185 - 187 |
| 9 | கருவிகள் (Tools) | 188 - 190 |
| 10 | பறவைகள் (Birds) | 191 - 193 |
| 11 | வளர்ப்புப் பிராணிகள் (Domestic Animals) | 194 - 196 |
| 12 | வன விலங்குகள் (Jungle Animals) | 197 - 199 |
| 13 | காய்கறிகள் (Vegetables) | 200 - 202 |
| 14 | நகர மையம் (City Centre) | 203 -205 |
| 15 | விளையாட்டுகள் (Sports) | 206 - 208 |
| 16 | மலர்கள் (Flowers) | 209 - 211 |
| 17 | குளியலறை (Bathroom) | 212 - 214 |
| 18 | சாலைக்குறிகள் (Road Sign Boards) | 215 - 217 |
| 19 | பண்புகள் (Values) | 218 - 220 |
| 20 | சிங்கப்பூரின் பண்டிகை, உடை மற்றும் சுற்றுலாத்தளங்கள் (Singapore Festivals, Attires and Tourist Spots) | 221 - 223 |
| 21 | அன்றாட வேலைகள் (Daily Routine) | 224 - 226 |
| 22 | இசைக்கருவிகள் (Music Instruments) | 227 - 229 |
| 23 | விலங்குகளின் வசிப்பிடங்கள் (Animal Habitats) | 230 - 232 |
| 24 | தொழில்கள் (Occupations) | 233 - 235 |
| 25 | மசாலாப்பொருள்கள் (Spices) | 236 - 238 |

# நீதிக்கதை 1

| | |
|---|---|
| **கருப்பொருள்** | **புத்திக்கூர்மை அவசியம்** |
| **நீதி** | **அறிவுக்கூர்மையை இழந்தால் துன்பம் நேரிடும்** |

அது ஓர் அழகிய **ஏரி**. அந்த ஏரியில் அழகிய ஆமை ஒன்று தனது இரண்டு வாத்து நண்பர்களுடன் வாழ்ந்து வந்தது. ஒவ்வொரு நாளும் அந்த இரு வாத்துகளையும் ஆமை சந்திப்பது **வழக்கம்**. ஒருநாள் அந்த இரண்டு வாத்துகளும் **வருத்தத்துடன்** காணப்பட்டன. இதைக்கண்ட ஆமை "ஏன் இருவரும் வருத்தத்துடன் உள்ளீர்கள்?" என்று கேட்டது.

"பல வருடங்களாக மழை பெய்யாத காரணத்தால் இந்த ஏரி **வறண்டு** வருகிறது. இன்னும் சில காலத்திற்குப் பிறகு இங்கு **முற்றிலும்** நீர் வற்றிவிடும். எனவே, நாங்கள் இருவரும் **பக்கத்து** ஊரில் உள்ள ஏரிக்குச் செல்ல இருக்கிறோம்" என்று வாத்துகள் கூறின.

"என்னை விட்டுச் செல்வதற்கு உங்களுக்கு எப்படி மனம் வந்தது? நீர் குறைந்தால் உங்களுக்கு உணவுதான் குறையும். எனக்கோ உயிரே போய்விடும். என் மீது உங்களுக்கு **நேசம்** இருக்குமானால் என்னையும் **அழைத்துச்** செல்லுங்கள்" என்றது ஆமை. "உனக்குத்தான் இறக்கைகள் கிடையாதே! உன்னை அழைத்துப்போக எங்களால் எப்படி முடியும்?" என்றது வாத்து.

அதற்கு ஆமை ஓர் **உபாயம்** சொன்னது. "ஒரு நீண்ட குச்சியை எடுத்து வாருங்கள். நான் நடுவில் என்னுடைய பற்களால் **கெட்டியாய்ப்** பிடித்துக் கொள்கிறேன். நீங்கள் **இருபக்கமும்** பிடித்துத் தூக்கிக்கொண்டு பறந்து செல்லுங்கள்" என்றது ஆமை.

"நாங்கள் **உயரப்பறக்கும்போது** நீ வாயைத் திறந்தால் கீழே விழுந்து **இறந்து** விடுவாய்" என்று வாத்துகள் கூறின. "அப்படியானால் நீங்கள் பறக்கும்போது நான் வாய் திறவாமல் இருக்கின்றேன்" என்று ஆமை கூறியது. இரு வாத்துகளும் இருபக்கமும் குச்சியைப் பிடித்துப் பறக்க நடுவில் ஆமை தன் வாயால் குச்சியைப் **பற்றிக்கொண்டு** இருந்தது.

சிறிது தூரம் பறந்தவுடன் ஆமை **ஆனந்தத்தில்** துள்ளிக் குதிக்க ஆரம்பித்தது. இரு வாத்துகளும் ஆமையிடம் "சிறிது நேரம் அமைதியாய் இரு. **இல்லாவிடில்** நீ கீழே விழுந்து விடுவாய்" என்று கூறின. செல்லும் வழியில் வாத்துகள் ஆமையுடன் பறந்து செல்வதைப் பார்த்த மக்கள் வாத்துகள் எதையோ தூக்கிக்கொண்டு போகின்றன எனக் **கூச்சலிட்டனர்**. ஆமையின் கெட்ட நேரம் அந்த வார்த்தைகள் அதன் **செவியில்** **விழுந்தது**. "இந்த மக்கள் ஏன் இப்படிக் கூச்சலிடுகின்றனர்?" என ஆமை வாய் திறந்து பேச வாத்துகள் பிடித்திருந்த குச்சியை அது விட்டுவிட்டதால் கீழே விழத்தொடங்கியது. கீழே விழுந்த ஆமை உடல் **சிதறி** இறந்தது.

WORDSMITH BEYOND LEARNING

# அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| 1 | **ஏரி** | பெரிய நீர்நிலை - Lake |
| 2 | **வழக்கம்** | எப்போதும் - Usual |
| 3 | **வருத்தத்துடன்** | கவலையுடன் - Sadly |
| 4 | **வறண்டு** | நீர் இல்லாமல் காய்ந்து போதல் - Become Dry |
| 5 | **முற்றிலும்** | முழுமையாக - Completely |
| 6 | **பக்கத்து** | அருகில் - Nearby |
| 7 | **நேசம்** | அன்பு / பாசம் - Love |
| 8 | **அழைத்து** | கூட்டிச் சென்று - Pick Up |
| 9 | **உபாயம்** | யோசனை - Idea |
| 10 | **கெட்டியாய்** | உறுதியாய் - Holding Strongly |
| 11 | **இருபக்கமும்** | இடதும் வலதும் - Both Sides |
| 12 | **உயரப்பறக்கும்போது** | மிக மேலாகப் பறக்கும்போது - When Fly High |
| 13 | **இறந்து** | உயிர் இல்லாமல் போதல் - Died |
| 14 | **பற்றிக்கொண்டு** | பிடித்துக்கொண்டு - Holding |
| 15 | **ஆனந்தத்தில்** | மகிழ்ச்சியில் - With Happiness |
| 16 | **இல்லாவிடில்** | இல்லாவிட்டால் / இல்லை என்றால் - If Not |
| 17 | **கூச்சலிட்டனர்** | தெளிவற்ற உரத்த குரல் எழுப்பினர் - Shouted |
| 18 | **செவி** | காது - Ear |
| 19 | **விழுந்தது** | கேட்டது - Heard |
| 20 | **சிதறி** | தனித்தனியாகப் பிரிந்து - Scatter |

## பயிற்சி 1

**வாக்கியங்களை நிரல்படுத்தி எழுதுக.**

1 | ஆமையும் | ஏரியில் | வாழ்ந்திருந்தன | வாத்துகளும் |

எ.கா : ஆமையும் வாத்துகளும் ஏரியில் வாழ்ந்திருந்தன.

2 | வழக்கம் | ஆமையும் | தினமும் | சந்திப்பது | வாத்துகளும் |

______________________________

3 | கவலையாகின | வாத்துகள் | வற்றியதால் | நீர் |

______________________________

4 | பக்கத்து | ஏரிக்குச் | திட்டமிட்டன | செல்ல | வாத்துகள் |

______________________________

5 | தன் | ஆமை | திறந்து | வாயைத் | பேசியது |

______________________________

6 | விழுந்த | உடல் | கீழே | ஆமை | சிதறி | இறந்தது |

______________________________

## பயிற்சி 2

**எழுத்துகளை நிரப்பிச் சொற்களைக் கண்டுபிடி.**

| எண் | விளக்கம் | விடை |
|---|---|---|
| 1 | தண்ணீரைத் தேக்கி வைக்கும் நீர் நிலை (Source of Water) | _____ ரி |
| 2 | காதுகளில் ஒலி கேட்டதை இப்படி அழைக்கலாம் | வி _____ ந் _____ து |
| 3 | ஏரியில் நீர் வற்றினால் இந்நிலை ஏற்படும் | வ _____ ண் _____ |
| 4 | தாய் தன் பிள்ளைகளிடம் வெளிப்படுத்தும் உணர்வு (Feeling) | நே _____ ம் |
| 5 | மகிழ்ச்சியில் இருப்பதை இப்படியும் அழைக்கலாம் | ஆ _____ ந் த _____ தி _____ |
| 6 | ஒலியைக் கேட்கப் பயன்படும் உடல் உறுப்பு (Body Part) | செ _____ |
| 7 | அதிக குழப்பத்துடன் சத்தம் இட்டனர் | _____ ச் _____ லி _____ ட ன ர் |
| 8 | நமது அருகில் இருப்பதை இப்படி அழைக்கலாம் | ப _____ க _____ து |
| 9 | இல்லையென்றால் என்பதற்கு இன்னொரு சொல் | _____ ல் _____ வி _____ ல் |
| 10 | வலது இடது என்பதை ஒரே சொல்லில் இவ்வாறு அழைக்கலாம் | இ _____ ப _____ க _____ ம் |

## பயிற்சி 3

**கோடிட்ட இடத்தில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கம் | வருத்தத்துடன் | முற்றிலும் | அழைத்து |
| உபாயம் | கெட்டியாய் | உயரப்பறக்கும்போது | |
| இறந்து | பற்றிக்கொண்டு | சிதறி | |

1 தீபாவளி அன்று எண்ணெய் தேய்த்துக் குளிப்பது (Oil Bath) நம் ________________.

2 மாடியிலிருந்து கீழே விழுந்த நாய் உடல் ________________ இறந்தது.

3 ரகு தன் அம்மாவின் கையை ________________ நடந்தான்.

4 தேர்வில் குறைந்த (Less) புள்ளிகள் பெற்ற அமலா ________________ இருந்தாள்.

5 அப்பா நேற்று எங்களைக் கோவிலுக்கு ________________ சென்றார்.

6 பட்டம் ________________ அதனைக் கண்டு குழந்தைகள் ரசித்தனர்.

7 சிங்கத்திடம் இருந்து தப்பிக்க நரி ஓர் ________________ செய்தது.

8 முகநூலில் (Facebook) உள்ள தகவல்கள் அனைத்தையும் ________________ உண்மை என நம்பக்கூடாது.

9 கடைக்குச் செல்லும்போது தீபா அப்பாவின் கையை ________________ பிடித்துக்கொண்டாள்.

10 இரண்டு நாட்கள் உணவில்லாமல் தவித்த (Suffering) பூனை ________________ போனது.

WORDSMITH BEYOND LEARNING

## பயிற்சி 4

**கீழ்க்காணும் வாக்கியங்களை எதிர்கால வாக்கியமாக (Future Tense) மாற்றி எழுதுக.**

1 இரண்டு வாத்துகள் தம் நண்பர்களுடன் வாழ்ந்தன.

எ.கா : இரண்டு வாத்துகள் தம் நண்பர்களுடன் வாழும்.

2 இரண்டு வாத்துகளும் வருத்தத்துடன் காணப்பட்டன.

______________________________

3 மழை பெய்யாததால் ஏரி வறண்டு போனது.

______________________________

4 ஆமை ஓர் உபாயம் சொன்னது.

______________________________

5 ஆமை குச்சியைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டது.

______________________________

6 ஆமை வாத்துகளுடன் பறக்கும்போது பேசாமல் இருந்தது.

______________________________

7 மக்கள் வாத்துகளைப் பார்த்துக் கூச்சலிட்டனர்.

______________________________

8 வாயைத் திறந்த ஆமை கீழே விழுந்தது.

______________________________

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP grapes + achieve Big

# பட அகராதி

## 1. பழங்கள் (Fruits)

| எண் | படம் | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| 1. |  | கொய்யா | Guava |
| 2. |  | நாவல் பழம் | Jamun Fruit |
| 3. |  | அத்திப் பழம் | Fig |
| 4. |  | சீத்தாப்பழம் | Custard Apple |
| 5. |  | விருத்திரப்பழம் | Dragon Fruit |
| 6. |  | மாம்பழம் | Mango |
| 7. |  | செம்புற்றுப்பழம் | Strawberry |
| 8. |  | நட்சத்திரப்பழம் | Star Fruit |

| | | | |
|---|---|---|---|
| 18. |  | தர்பூசணி | Water Melon |
| 19. |  | கொத்துப்பேரி | Plum |
| 20. |  | பப்பாளிப்பழம் | Papaya |
| 21. |  | மாதுளை | Pomegranate |
| 22. |  | அன்னாசிப்பழம் | Pineapple |
| 23. |  | சர்க்கரை பாதாமி | Apricot |
| 24. |  | முள்நாறிப்பழம் | Durian |
| 25. |  | அவுரிநெல்லி | Blueberry |

# சிகரம் - P4 சிறப்புத் தேர்ச்சிக்கான 1000 சொல்வளங்கள்

# விடைகள்

## 1. புத்திக்கூர்மை அவசியம்

**பயிற்சி 1**

1 ஆமையும் வாத்துகளும் ஏரியில் வாழ்ந்திருந்தன.
2 தினமும் ஆமையும் வாத்துகளும் சந்திப்பது வழக்கம்.
3 நீர் வற்றியதால் வாத்துகள் கவலையாகின.
4 வாத்துகள் பக்கத்து ஏரிக்குச் செல்ல திட்டமிட்டன.
5 ஆமை தன் வாயைத் திறந்து பேசியது.
6 கீழே விழுந்த ஆமை உடல் சிதறி இறந்தது.

**பயிற்சி 2**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஏரி | 6 | செவி |
| 2 | விழுந்தது | 7 | கூச்சலிட்டனர் |
| 3 | வறண்டு | 8 | பக்கத்து |
| 4 | நேசம் | 9 | இல்லாவிடில் |
| 5 | ஆனந்தத்தில் | 10 | இருபக்கமும் |

**பயிற்சி 3**

| | | | |
|---|---|---|---|
| 1 | வழக்கம் | 6 | உயரப்பறக்கும் போது |
| 2 | சிதறி | 7 | உபாயம் |
| 3 | பற்றிக்கொண்டு | 8 | முற்றிலும் |
| 4 | வருத்தத்துடன் | 9 | கெட்டியாய் |
| 5 | அழைத்து | 10 | இறந்து |

**பயிற்சி 4**

1 இரண்டு வாத்துகள் தம் நண்பர்களுடன் வாழும்.
2 இரண்டு வாத்துகளும் வருத்தத்துடன் காணப்படும்.
3 மழை பெய்யாததால் ஏரி வறண்டு போகும்.
4 ஆமை ஓர் உபாயம் சொல்லும்.
5 ஆமை குச்சியைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளும்.
6 ஆமை வாத்துகளுடன் பறக்கும்போது பேசாமல் இருக்கும்.
7 மக்கள் வாத்துகளைப் பார்த்துக் கூச்சலிடுவர்.
8 வாயைத் திறந்த ஆமை கீழே விழும்.

## 2. கோபத்தைக் குறைத்துக்கொள்

**பயிற்சி 1**

1 திருமலாம்பாள் அடிக்கடி கொட்டாவி விட்டுக்கொண்டு இருப்பார்.
2 அரசர் அம்மையாரின் முகத்தைப் பார்க்க வெறுத்தார்.
3 தெனாலிராமன் பிரச்சனையைத் தீர்க்க முடிவெடுத்தான்.
4 விவசாயம் செய்பவர்கள் கொட்டாவி விடக்கூடாது.
5 தெனாலிராமன் மன்னரை ஓரக்கண்ணால் பார்த்தான்.
6 மன்னரும் அம்மையாரும் பரிசுகள் கொடுத்தனர்.

**பயிற்சி 2**

| | | | |
|---|---|---|---|
| 1 | பழக்கமாகி | 6 | வாக்கு |
| 2 | விநோதமாக | 7 | சூசகமாக |
| 3 | பயிர்வளத்தை | 8 | வேதனை |
| 4 | விவாதித்து | 9 | அரசருக்கு |
| 5 | திளைத்த | 10 | மேம்படுத்துவது |

**பயிற்சி 3**

| | | | |
|---|---|---|---|
| 1 | துணைவி | 6 | வளரும் |
| 2 | அதிகாரிகள் | 7 | நாசம் |
| 3 | தவிர்த்து | 8 | ஓரக்கண்ணால் |
| 4 | விசாரித்தார் | 9 | புரிந்து |
| 5 | தீர்ப்பதாக | 10 | பயிர்கள் |

**பயிற்சி 4**

1 கொட்டாவி விடுவது அவரது பழக்கமாகின்றது.
2 திருமலாம்பாள் அருகில் செல்வதை அரசர் தவிர்க்கிறார்.
3 அவர் மிகுந்த வேதனை அடைகிறார்.
4 தெனாலிராமன் பிரச்சனையைத் தீர்ப்பதாக வாக்குக் கொடுக்கிறான்.
5 அரசு அதிகாரிகள் மன்னரைக் காண வருகின்றனர்.
6 விவசாயிகள் கொட்டாவி விடக்கூடாது என்று கூறுகிறான்.
7 தெனாலிராமன் மன்னரை ஓரக்கண்ணால் பார்க்கிறான்.
8 மன்னர் தன் தவற்றை எண்ணி வருந்துகிறார்.